1980 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் சொன்ன உணர்வுகளை மனதில் வைத்துக் கொண்டு தான் இன்றைக்கு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்து, ஒரு மசோதாவைக் கொண்டு வந்து அது ஆய்வில் இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று மாவட்டங்களுக்குச் சென்ற பிறகு விரைவில் நிச்சயமாக இந்த கண்ணியம் மிக்க சபையில் அது நிறைவேற்றப்பட்டு உறுப்பினர் அவர்கள் விரும்புவதுபோல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிச்சயமாக விரைவில் எவ்வளவு விரைவில் வர முடியுமோ அவ்வளவு விரைவில் தேர்தல் நடத்தி பொதுமக்கள் பிரதிநிதிகள் மத்தியில் அது ஒப்படைக்கப்படும்.

திரு. வி. கோ. சின்னசாமி: ஒரு பஸ் முதலாளி இருக்கிறார் என்றால் அந்த பஸ் முதலாளி ஒரு சேட்டிடமோ அல்லது வேறு ஒருவரிடமோ பஸ்ஸை அடமானம் வைத்து ஆயிரக்கணக்கான ரூபாய் கடன் பெறுகிறார்கள். அதேபோன்று விவசாயிகள் நிலங்களை ஒட்டுமொத்தமாக பரப்பு எவ்வளவு வருகிறது என்று கணக்கெடுத்து அதன் அடிப்படையில் அவரவர்களுக்குத் தேவைப்படுகிற ரூபாய் எவ்வளவு வேண்டுமானாலும் சொத்து மதிப்பை வைத்துக் கடன் கொடுக்க அரசு சட்டதிட்டங்களை மாற்றி இனிமேலாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கோவிலாங்குளம் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்.

*வினா எண் 82—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அருப்புக்கோட்டைத் தாலுகா கோவிலாங்குளம் கிராமம் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் ரூ. 8,159 கையாடல் நடைபெற்றுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் யாரால் கையாடல் செய்யப்பட்டுள்ளது ?

(இ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) அருப்புக் கோட்டை தாலுகா கோவிலாங்குளம் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் ரூ. 7,640 கையாடல் நடைபெற்றுள்ளது என்பது தமிழ்நாடு கூட்டுறவு வங்கி சட்டம் 65 பிரிவின்கீழ் நடத்தப்பட்ட விசாரணை மூலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

(ஆ) கையாடல் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. வி. பால்ராஜ் மற்றும் சங்கத்தின் முன்னாள் இளநிலை மேற்பார்வையாளர் செயலர் திரு. எஸ். சௌந்தையன் ஆகியோர் ஆவர்.

(இ) கையாடல் தொகையை திரும்பப் பெற முன்னாள் தலைவர் மீதும் செயலாளர் மீதும் சட்ட பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்களின் அசையா சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, பணத்திற்காக ஜப்தி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கையாடல் புரிந்த செயலாளர், கூட்டுறவு இலாகாவின் அதிகாரி என்று கருதுகிறேன். அவர்மீது அதிகாரப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கையாடல் குற்றச்சாட்டிலே ஈடுபட்டிருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. இன்றையதினம் அந்தச் செயலாளர் சௌந்தையன் என்பவர் இராமநாதபுர மாவட்ட வங்கியிலிருந்து தற்காலிக பதவிநீக்கம் செய்யப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. கையாடல் செய்ததாக கூறப்பட்ட முன்னாள் தலைவர் மீதும், செயலாளர் மீதும் இன்றையதினம் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுடைய அசையா சொத்துக் களை ஜப்தி செய்திருக்கிறோம். செயலாளர் இன்றையதினம் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அதைப் போலவே, அந்தத் தலைவர் பொறுப்பிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.